# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 மார்கழி மாதம் 03ம் திகதி முதல் 09ம் திகதி வரை

## *“இயேசு கிறிஸ்து ஆண்டவரின் பிறப்பின் வழியாக இறை அரசு உலகில் உதயமானது”*

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்

- **(மீக்கா 5:2) “எப்ராத்தா எனப்படும் பெத்லேகேமே யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிரியதாய் இருக்கின்றாய் ஆயினும் இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்.”** இறைவாக்கினர் கூறியது போல் தர்மமானவர் மனித உருவெடுத்த இவ்வுலகில் தோன்றினார். எம்மோடு வாசம் செய்தார்.
- இழந்து போன இறை அரசின் உரிமையை அவர் மீண்டும் இவ்வாறு உரிமையாக்கித் தந்தார். இறை அரசின் அன்பின் இலட்சணத்தை நாம் அவரில் கண்டோம். அதாவது கைவிடும் அன்பு, இடமளிக்னும் அன்பு, பாதங்கழுவும் அன்பு மற்றும் பலியாகும் அன்பின் மூலம் ஆண்டவர் விடுதலையை உருவாக்கிக் தந்தார்.
- ஏமது நமஸ்காரம் புகழ்ச்சி மற்றும் நன்றியை ஒப்புக் கொடுத்தவாறு புபுது பாடலை பாடி துதிப்போம். (பொருத்தமான பாடலை பாடவும்.)

.

01. நாளுக்குரிய நற்செய்தி

- நாம் இப்பொழுது திருவருகைக் காலத்திற்கு வந்துள்ளோம். திருவருகை என்பது வருகையாகும். கிறிஸ்து ஆண்டவரின் மனுவுருசாகுதலின் மறை இரகசியத்தின் வழியாக இறைவனின் அன்பின் அரசு உலகில் உதயமானது.
- திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில் திருச்சபைத் தாயானவள் எமக்கு முன்வைத்த செய்திக்கு எமது கண் மன இதயத்தை உட்படுத்தியவாறு புனித மத்தேயு 7:21, 24-27 வரை திருவசனப் பகுதிகளை வாசித்து இதன் வழியாக வெளிப்படும் நற்செய்தி என்ன என்பதனை கலந்துரையாடி பகிர்ந்து கொள்ளவும்.

02. வார்த்தையின் ஊழியர்க்காக

- சரித்திரப் புகழ் பெற்ற நத்தார் வழியாக உலகில் உதயமான இறை அரசினை தனிப்பட்டவராக, குடும்பமாக, கிறிஸ்தவ சங்கமாக மற்றும் புபுதுவ மக்கள் என்றவகையில் அனுபவிப்பதற்கு, நாம் வாழும் பல்வேறுப்பட்ட சூழலிலும், சமூக சூழலிலும், சாட்சி பகிர்ந்திடவும் எம்மை விழிப்புற வைக்கின்றது.
- (2கொரிந்தியர் 5:14-18) “…**ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாய் படைக்கப்பட்டவராய் இருக்கின்றார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ.”**
- நத்தார் எனும் பெத்லகேமில் கிறிஸ்துவின் பிறப்பு நிரந்தரமும் எம்மோடு இருக்கும் கிறிஸ்து ஆண்டவரின் பேரில் பொன்று, மகிமை அலங்காரத்துடன் வரும் நாளில் இறை அரசினை முழுமைப்படத்தியவாறு விற்றிருக்கும் ஆண்டவர் பேரிலும் எமது கண் மன இதயத்தை விழிப்புறச் செய்யும் நேரமே இது.

- விண்ணக அரசின் வாழ்வு எனப்படும், கிறிஸ்துவோடு அவருக்குள், அவரை முன்கொண்டு வாழும் வாழ்கையாகும். கிறிஸ்துவுக்குள் வாழ்வது என்பது அவரினின்று வெளிப்படும் வார்த்தை வழியாக வெளிப்படும் அப்பா தந்தையின் பரிசுத்த விருப்பத்தில் வாழ்தல், நடத்தல், தங்கியிருத்தல், தூய ஆவியானவர் வழியாக பதிலளிக்கும் வாழ்க்கையாகும்.

03. ஏம் பேரில்.

❖ அன்று உரோம அதி இராச்சியத்திலிருந்த அநீதி, அசாதாரனம், பலாத்காரம், போன்று தவறான துஷ்ட நடத்தை போன்று மனித ஆதிக்கம் உச்ச நிலையிருந்த யுகம் ஒன்று இருந்தது. வாழ்க்கை வீழ்ச்சியடைந்தது. ஒழுக்க நெறி வீழ்ச்சியடைந்திருந்த யுகத்தில் கிறிஸ்து ஆண்டவரின் திருவருகையானது ஏழைகளுக்குள் ஒரு மாபெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியவாறு புது யுகம் ஒன்று உதயமாகியது.

❖ எமது நாட்டை நோக்கி எமது கண் மன இதயத்தை செலுத்திப் பார்க்கையில் எமது சமுதாய நிலைமையும் அவ்வாறானதல்லவா? நாளுக்கு நாள் மனித சுயநலம் அரசாளும் பாவ இருள் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள இந்த நிலைமைக்கு பதில் என்ன? எம் மத்திக்கு வந்துள்ள, எம்முடன் வாசம் செய்கின்ற, மீண்டும் வரவிருக்கின்ற இயேசு ஆண்டவரே.

04. செயல்பாட்டிற்காக :

(பிலிப்பியர் 2:5) ‘‘கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்’’ எமது முழு எதிர்பார்ப்பயும் இயேசு ஆண்டவரில் வைப்போம். கைவிடுதலின், இடமளித்தலின் சொல்வதைச் செய்வதின், பலியாகுதலின் அன்பின் இலடசணங்களை எமது வாழ்வில் செயல்படுத்துவோம்.

- திருவருகை காலத்தின் நற்செய்தியில் வாழ்ந்திட ஆரம்பிப்போம். இறை அரசைக் குறித்த நோக்கிக்கு உள்ளாகியவாறு அடுத்திருப்பவரையும் அதற்கு உள்ளாக்குவோம்.

05. இறுதி செபம்.:

❖ புதிய பிறப்பினை அனுபவிப்பதற்கு உண்மையாகவே தாகத்தினை ஏற்படுத்திக் கொள்வோம்.

❖ அதற்காக தூய ஆவியானவரின் வல்லமையை வேண்டி செபிப்போம்.

❖ புதுது பாடல் (பொருத்தமான பாடலை பாடவும்.)